பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 24 | திங்கட்கிழமை | 09.09.2024 | அதிர்வு 038

## சஜித்தின் ஆட்சியில் மலையக மக்களுக்கும் சம உரிமை கிடைக்கும்

### மனோ எம்.பி. தெரிவிப்பு



மலையக மக்ளும் சம உரிமை பெற்றவர்களாக வாழும் நிலை சஜித் பிரேமதாஸ 07




# வடக்கு, கிழக்கு மக்கள் ரணிலை மீண்டும் ஆட்சியில் அமர்த்த முடிவு

### இப்படி பரப்புரைக் கூட்டத்தில் அமைச்சர் நிமல் கூறினார்

"வடக்கு மாகாண மக்களும், கிழக்கு மாகாண மக்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஆட்சியில் அமர்த்தத் தீர்மானித்து விட்டனர்."

- இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஹப்புத்தளையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நடைபெற்ற 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். 07




# மக்கள் என்னை வெல்ல வைப்பர்

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் நம்பிக்கை



"யார் எதைச் செய்தாலும் மக்கள் என்னை வெற்றி பெறச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நுவரெலியா – தலவாக்கலையில் நேற்று 06



உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவர் அழைப்பு எடுத்து ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். அதைக் கேட்டதும் நடிகர் வடிவேலுவின் படக் காமெடி ஒன்று தான் நினைவுக்கு வந்தது.

வாக்களிப்பு நிலைய வாசலில் நிற்கும் வடிவேலு வாக்களித்து விட்டு வருவோரிடம் யாருக்கு வாக்களித்தீர்கள் என்று விசாரிப்பார்.

அப்போது அவர்களில் ஒருவன் "அண்ணே! அவனிடம் (அந்த வேட்பாளரிடம்) வாங்கிய காசுக்காக அவனின் ஏணி சின்னத்தில் ஒரு குத்து. உன்னிடம் (வடிவேலுவிடம்) வாங்கிய காசுக்கு உன் தென்னை மர சின்னத்தில் ஒரு குத்து" – என்று விளக்கம் சொல்வான்.

இப்போது தமிழரசுக் 06








# தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து வவுனியாவில் நேற்று பிரசாரக் கூட்டம்

## மக்கள் பெருமளவில் பங்கேற்பு

(கே.வசந்தன்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினரால் களமிறக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு ஆதரவு தெரிவிக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டம் வவுனியா கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

முன்னதாக குருமன்காடு பகுதியில் இருந்து மங்கள இசை முழங்க தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

தொடர்ச்சி▼












# தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து வவுனியாவில் நேற்று பிரசாரக் கூட்டம்

## மக்கள் பெருமளவில் பங்கேற்பு

தொடர்ச்சி▲

மற்றும் ஏனைய அரசியல் பிரமுகர்கள் நிகழ்வு மைதானத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அங்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து கூட்டம் ஆரம்பமாகியது.

முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் வி.மணிவண்ணன், முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்து, அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், ஜதீந்திரா, யோதிலிங்கம் மற்றும் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


























# விளையாட்டுத்துறையில் வெற்றி பெற முறையான பொறிமுறை மிக அவசியம்

## ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார தெரிவிப்பு

விளையாட்டுத்துறையில் வெற்றி பெறுவதற்காக முறையான பொறிமுறை மிகவும் அவசியமாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் விளையாட்டுக் கொள்கை வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பதக்கம் மற்றும் தேசிய மட்டத்தில் உள்வாங்கப்படுதல் என்ற அடிப்படையில் மாத்திரம் இலங்கையின் விளையாட்டு முறைமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கிராமிய மட்டத்தில் கரப்பந்தாட்ட மைதானங்கள் இருந்ததுடன், விளையாட்டு வீரர்கள் வளர்க்கப்பட்டனர். இன்று விளையாட்டு அரசியலாக்கப்பட்டு இவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றை நிவர்த்திப்பதற்காக – விளையாட்டுத்துறையில் வெற்றி பெறுவதற்காக முறையான பொறிமுறையைத் தேசிய மக்கள் சக்தி அறிமுகப்படுத்தும்.” – என்றார்.












# காணி உரிமையையும் வீட்டு உரிமையையும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவேன்

## பரப்புரைக் கூட்டத்தில் ரணில் உறுதி

லயன் அறைகளுக்குப் பதிலாக, கிராமங்களை உருவாக்கி, அதற்கான காணி உரிமையையும், வீட்டு உரிமையையும் வழங்கி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது தனது முன்னுரிமையான எதிர்பார்ப்பு என்று சஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கும் அஸ்வெசும நிவாரணம் வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஹப்புத்தளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இந்தப் பிரதேசங்கள் பற்றி நான் 75 வருடங்கள் அறிவேன். இன்று குறைபாடுகள் இல்லாத ஹப்புத்தளை தேர்தல் தொகுதிக்கு வந்ததில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2022 ஆம் ஆண்டில் இராணுவ நிகழ்ச்சி ஒன்றுக்காக இங்கு பிரதமராக வந்தபோது அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசைகள் நீண்டு கிடந்தன. தொழில் இன்றி மக்கள் அல்லலப்பட்டனர். வீடுகளில் முடங்கினோம். எதிர்காலம் கேள்விக்குறியாகத் தெரிந்தது. இவற்றை நிவர்த்திக்க மக்களுக்காக அரசை ஏற்றுக்கொண்டேன்.

அதன் பின்னர் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. இதிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. அவர்களின் நிபந்தனைகளுக்கு அமைய எவ்வாறு செயற்பட வேண்டும் எனவும் முன்கூட்டியே அறிந்திருந்தேன். அவர்கள் மேலும் இலங்கைக்குக் கடன் தரவும் தயாராக இருக்கவில்லை.

கடன் பெறவோ, பணம் அச்சிடவோ முடியாது என்று வலியுறுத்தினர். கைகளையும் கால்களையும் கட்டிப்போட்டிருந்தனர். அரசிடம் பணம் இருக்கவில்லை. இறுதியாக வேறு வழியின்றி வரியை அதிகரிக்கும் கடினமாக முடிவை எடுத்தோம். வருமான வரியையும் அதிகரித்தோம். ரூபாவின் பெறுமதி இரட்டிப்பாக அதிகரித்தது. ஆனால் பணம் கிடைக்கவில்லை.

அதற்கு மத்தியிலேயே கஷ்டமான தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால், அதன் பயனாக நாட்டின் வருமானம் அதிகரித்தது. டொலரின் பெறுமதி குறைந்தது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சடுதியாகக் குறைந்தன. ஆனால், மக்கள் கஷ்டம் முற்றாகக் குறையவில்லை. எனினும், எமது வருமானம் அதிகரிக்கின்றது. 2023 ஆம் ஆண்டு மக்களிடம் ஓரளவு பணம் இருந்தது.

அதனை யாருக்கும் பகிரலாம் என்று சிந்தித்தேன். அதன்படியே குறைந்த வருமானம் ஈட்டும் மக்களுக்கு "அஸ்வெசும" வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தினோம். லயன் அறைகளில் வசிக்கும் ஓய்வுபெற்றவர்களுக்கும் அஸ்வெசும நிவாரணம் வழங்கப்படும். எனவே, இவ்வருடத்தில் மேலும் வருமானம் அதிகரிக்கும். தோட்டத் தொழிலாளர் சம்பளமும் அதிகரிக்கும்.

அரச ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா வரையில் சம்பளம் அதிகரிக்கும். அடுத்த வருடம் மேலும் அதிகரிக்கும். ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்தி விலைகளைக் குறைத்து நிவாரணம் வழங்குவோம்.

நாட்டின் கடன் சுமையைக் குறைப்பதற்கான இணக்கப்பாடுகளை எட்டியுள்ளோம். இப்போது வெளிநாட்டு வங்கிகளுடன் கொடுக்கல் - வாங்கல் செய்ய முடியும். ஐ.எம்.எப்பிடமிருந்து நிவாரணங்கள் கிடைக்கின்றன. கடன் வழங்கிய நாடுகள் மீள் செலுத்த சலுகைக் காலத்தை வழங்கியுள்ளன. இந்த ஒப்பந்தங்களைப் பின்பற்றி முன்னோக்கிச் சென்றால் எமக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும்.

எனவே, எனது எதிர்காலத்தை விடுத்து உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானியுங்கள். அநுரவும் சஜித்தும் இவற்றை மாற்றுவதாகக் கூறுகின்றார்கள். அதனால் நெருக்கடிகள் மீண்டும் தலையெடுக்கும்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்றுவதே இப்போதைய தேவையாகும். அதனால் தன்நிறைவான வருமானத்தை ஈட்ட வேண்டும். பழைய முறைகள் மாற்றப்பட வேண்டும். குறிப்பாக தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை அதிகரிக்கும் முயற்சிகளை முன்னெடுக்கின்றோம். லயன் அறை முறைகளை முற்றாக ஒழித்துவிட்டு கிராமங்களாக மாற்றியமைப்போம். காணி உறுதிகளையும் மக்களுக்குத் தருகின்றோம். விரும்பியவாறு வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியும். அதனால் தோட்டங்கள் கிராமங்களாக பரிணமிக்கும்.

மரக்கறி மற்றும் பழ உற்பத்திக்கும் தேவையான வசதிகளை மேம்படுத்தித் தருவோம். அதனால் உள்நாட்டு, ஏற்றுமதி உற்பத்திக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். சுற்றுலாத்துறையையும் இங்கு பலப்படுத்த வேண்டும். அதனால் புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

எதிர்காலத்தில் நாட்டை முன்னேற்றுவோம். டிஜிட்டல் யுகத்தை உருவாக்குவோம். பெண்களையும் கைவிடவில்லை. அதற்குரிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். பெண்கள் சிறுவர் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்துவோம். பெண்களைத் தொழில் சந்தைக்குள் உள்வாங்குவோம். சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களை அமைத்துத் தருவோம்.

இவற்றுக்காகவே எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்கின்றேன்.ஹப்புத்தளை மற்றும் தியதலாவ போன்ற நகரங்களின் அபிவிருத்திக்கு வழிசெய்வேன். எனவே, சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது, கிராமங்களும் இருக்காது." - என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கட்சியின் ஜிஞ்சர் குழு ஒன்று நடத்தும் திருகுதாள அரசியலைப் பார்த்தால் இந்த் தேர்தலில் வாக்கு சீட்டில் ஒரே சமயத்தில் பல்வேறு தரப்புகளுக்கும் புள்ளடி போட வேண்டியதுதான் என்று தோன்றுகின்றது.

தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசவை ஆதரிக்க முடிவு எடுத்தபோது, 'அதற்கு முன்னோடி நாங்களே, அதற்கு முன்னர் சஜித்தைச் சந்தித்து முடிவு செய்து விட்டோம்'- என்ற சாரப்பட சஜித்துடன் தாங்கள் நிற்கும் படங்களுடன் தகவல் வெளியிட்டு ஆரவாரம் பண்ணியது அந்த குழு.

பிறகு பார்த்தால் தமிழ்ப் பொது வேட்பாளருக்காக வீதி வீதியாகப் பிரசாரம் செய்து, நோட்டீஸ் கொடுக்கும் பணியில் அந்த குழுவினர் ஈடுபடும் படங்கள் வெளிவந்தன.

இப்போது என்னவென்றால் அக்குழுவினர், யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணிலுடன் குசு குசுப்பு திட்டங்களைக் கட்டவிழ்க்கின்றனர். அது பற்றிய படங்களும் வெளியாகி இருக்கின்றன.

அப்படி என்றால் இந்த முறை வாக்கு சீட்டில் தொலைபேசிக்கு ஒரு குத்து, சிலிண்டருக்கு ஒரு குத்து, சங்கு ஒரு குத்து என்று மூன்றுக்கும் முதலாம் நம்பர் அல்லது புள்ளடி போட வேண்டியதுதான் அந்தக் குழுவின் அரசியல் வழிகாட்டலா என்று கேட்டார் அந்த ஊடக நண்பர்.

நல்ல கேலிக்கூத்து அரசியல்தான் இது பொங்கல்..!

\+ \+ \+

வடக்கு அரசியலில் அண்ணன் – தம்பி முரண்பாடு சூடு பிடித்திருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனினுடைய தகப்பனார் இராமநாதனுக்கும் அவரின் சகோதரர் ராஜனுக்கும் இடையிலான முரண்பாடு அரசியல் மோதலாக உருவெடுத்திருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த சமயம் அங்கஜன் தரப்பின் ஏற்பாட்டில் உடுப்பிட்டியில் ஒழுங்குபடுத்தப்பட்டது ஒரு பொதுக்கூட்டம்.

கூட்டத்துக்கு ஆளகள் திரட்டப்பட்டு, தங்கள் பவரைச் செயலில் காட்டினார்கள் அவர்கள்.

அதற்கு நிகராக அங்கஜனின் தந்தையாரின் சகோதரர் தமது பவரையும் காட்ட நடவடிக்கை எடுத்திருக்கின்றார்

சஜித்தை வரும் தினங்களில் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து, அதே மைதானத்தில், அதை விடப் பிரமாண்டமான அரசியல் கூட்டத்தை நடத்திக் காட்ட ராஜன் தரப்பு முயல்வதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு இடமளிக்காமல் மைதானத்தை மடக்கி, தமது கையில் வைத்திருக்க அங்கஜன் தரப்பு முயலவே விவகாரம் சூடாகிவிட்டது.

மைதானத்தில் இரு அணியும் சந்திக்கும் சூழல் வந்தபோது பதற்றம் உச்சத்தை எட்டி இருக்கின்றது. இருதரப்புகளும் நெல்லியடி பொலிஸில் உயிர் அச்சுறுத்தல் என்று முறைப்பாடு செய்திருக்கின்றன எனக் கேள்வி.

சஜித்தின் கூட்டம் அங்கு நடந்தால் – அதுவும் கூட – கொடிகட்டிப் பறக்கும் என்கின்றன களமுனைத் தகவல்கள்.

எது, எப்படி என்றாலும், முட்டாமல், மோதாமல் ஏட்டிக்குப் போட்டியாக கூட்டம் அமைதியாக நடந்து முடிந்தால் சரி.

## மக்கள் என்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இந்த ஜனாதிபதியே அவரின் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார். அநுர குமாரவின் பிரத்தியேகச் செயலாளராகுவதற்கு அவர் விருப்பப்படுகின்றார். ஏின் சம்பளத்தை 1000 ரூபா, 1500 ரூபா, 2000 ரூபாவாக வழங்குவோம், பெற்றுத் தருவோம் எனத் தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள். லயன் அறைகளில் வாழ்ந்து கூலித் தொழிலில் வாழ்க்கையைக் கழிக்கின்ற இந்த மக்களுக்காகவும், இந்த இளைஞர்களுக்காகவும் விவசாயக் காணியை வழங்கி, சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவோம்.



தற்போது ஜனாதிபதியும் அநுரகுமாரவும் ஒன்றாக இணைந்து என்னைத் தோல்வியடையச் செய்வதற்காக பணத்தைச் செலவிடுகின்றார்கள். யார் எதைச் செய்தாலும் மக்கள் என்னை வெற்றி பெறச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு



இருக்கின்றது.

அத்தோடு விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை 5 ஆயிரம் ரூபாவுக்கு வழங்குவோம் என்று நாம் கூறியபோது இந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை 4 ஆயிரம் ரூபாவுக்கு வழங்குவோம் எனச் சொல்லிக்கொண்டு திரிகின்றார்.

200 வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றைக் கொண்ட இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் வியர்வை சிந்தி, கண்ணீர் வடித்து, இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு வழங்குகின்ற ஒத்துழைப்பை மறக்க முடியாது. இந்தப் பக்பலம் குறித்து நாம் பெருமைப்பட்டு அவர்களுக்கு நன்றி கூறி கௌரவப்படுத்துகின்றோம். அத்தோடு இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் அவர்களைச் சமமான முறையில் ஏற்றுக்கொள்கின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் ரீதியான தகுதியான பிரதிநிதித்துவத்தை வழங்குவதோடு, காணிக்கான, வீட்டுக்கான உரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்கு உறுதி பூண்டு, லயன் அறைகளுக்குப்பதிலாகதனியானகுடியிருப்புக்கிராமங்களை அமைத்துக் கொடுப்பதற்கான அடித்தளத்தை இடுவோம்.

தோட்டத் தொழிலாளர்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவோம். தோட்டத் தொழிலாளர்க

ஆரம்பப் பாடசாலை முதல் கல்வித் துறையை மேம்படுத்துவதோடு சகல வசதிகளையும் வழங்குவோம். சிறந்த கல்வியை வழங்குவதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். பாடசாலைக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதோடு பல புதிய தேசிய பாடசாலைகளையும் உருவாக்குவோம். சிங்களம், தமிழ், முஸ்லிம், பேக்கர் அனைவருக்கும் கல்வியிலும் சுகாதாரத்துறையிலும் முன்னேற்றத்தைக் கொண்டு வருவோம்.

தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம், திறன் விருத்தி கல்வி போன்றவற்றை நடைமுறைப்படுத்தி, சர்வதேசமட்டத்திலானதொழிற்பயிற்சிநிலையங்களையும் உருவாக்கி இளைஞர்களை அறிவு ரீதியாக உயர்த்துவோம். அத்தோடு நுவரெலியா இளைஞர்களுக்காகப் புதிய பல்கலைக்கழகம் ஒன்றையும் உருவாக்குவோம். அதன் ஊடாக புத்தாக்கத்துறையைக் கற்பித்து புதிய வர்த்தக முறைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்போம்." – என்றார்.






# ரணிலின் ஆட்சிதான் மலையகத்துக்குப் பொற்காலம்! அவரை நாம் நிச்சயம் வெற்றி பெற வைக்க வேண்டும்!!

## இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

"நல்லாட்சியின்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிதான் மலையக மக்களுக்கு பொற்காலமாக அமைந்தது. தற்போதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புரட்சிகரமான திட்டங்களை முன்னெடுக்கின்றார். எனவே, அவரை நாம் நிச்சயம் வெற்றி பெற வைக்க வேண்டும்."

– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஹப்புத்தளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே வடிவேல் சுரேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மலையக மக்களுக்கு வாக்குறுதி பெற்றுத் தந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை மக்கள் மறக்கக்கூடாது. மலையக மக்களின் வீட்டுத் திட்டங்கள், சுவசெரிய அம்புலன்ஸ் சேவை, கல்வியல் கல்லூரிகள் என்று பல சேவைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்திருக்கின்றார். 1700 ரூபா சம்பள அதிகரிப்பையும் ஜனாதிபதி உறுதி செய்வார் என்று நம்புகின்றோம்.

மலையகத்தின் தமிழ்க் கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றிணைத்துள்ளார். எனவே, நன்றிக்கடன் செலுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களிப்போம்.

அன்று கொன்று தள்ளிய தோட்ட அதிகாரிகளையும், தீயிட்டுக் கொளுத்திய தொழிற்சாலைகளையும், மக்களின் அடையாள அட்டைகளையும் அவர்களால் பெற்றுத்தர முடியுமா?" – என்றும் வடிவேல் சுரேஷ் வினவினார்.

---

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"சஜித் பிரேமதாஸவால் அல்லது அநுரகுமார திஸாநாயக்கவால் இந்த நாட்டுக்கு எந்த நன்மையையும் கிடைக்கப் போவதில்லை. அவர்கள் இருவரும் பிரதமர்களாகக் கூட பதவி வகித்தவர்கள் இல்லை. இருவரும் முட்டாள்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால்தான் நாட்டுக்கு நன்மை கிடைக்கும். வரிசை யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த ஒரே தலைவர் அவர்தான்.

இன்று வடக்கு மாகாண மக்களும், கிழக்கு மாகாண மக்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஆட்சியில் அமர்த்தத் தீர்மானித்து விட்டனர். ஊவா மாகாண மக்களும் ஒருபோதும் நன்றிக்கடன் மறப்பவர்கள் அல்லர்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்ட ஜனாதிபதி பொருளாதாரம் மேலும் வலுவடையும்போது தோட்ட மக்களின் தேவைகள் பலவற்றையும் தீர்த்து வைப்பார்.

இன்று பதுளை வைத்தியசாலை வசதிகளை மேம்படுத்தித் தரவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கின்றார். எனவே, அவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும்." – என்றார்.

---

## சஜித்தின் ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையிலான ஆட்சியில் உதயமாகும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, நுவரெலியா – தலவாக்கலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே மனோ கணேசன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"சஜித் பிரேமதாஸவுடன் முதன்முறையாக நாம் உடன்பாடு செய்துள்ளோம். இதன்மூலம் எமது மலையக மக்களும் அனைத்து உரிமைகளையும் பெற்றவர்களாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும். இரண்டாவது குடிமக்களாக அல்லாமல் ஏனையோர்போல் வாழும் நிலை ஏற்படும். இதன் அடிப்படையிலேயே சஜித் பிரேமதாஸவை ஆதரித்துள்ளோம்.

நல்லாட்சி காலத்தில்கூட நாம் போராடியே உரிமைகளை வென்றோம். எனினும், நாம் விரும்பும் ஆட்சியாக சஜித் ஆட்சி அமையவுள்ளது. அந்த ஆட்சியில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பலமான பங்காளிக் கட்சியாக இருக்கும். நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் எமது கூட்டணியே முன்னிலையில் இருக்கின்றது. எனவே, ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவது உறுதி.

எமது மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். நாள்கூலி முறைமை ஒழிக்கப்படும். சமத்துவம் உள்ள மக்களாக நாம் வாழும் நிலை உருவாகும். இந்த விடயத்தில் நாம் மிகவும் அவதானத்துடன் செயற்படுகின்றோம்.

நாம் சலுகைகளுக்காக அல்ல, எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காகவே சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்துள்ளோம். எமது மக்கள் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்படுவார்கள். சம உரிமை பெற்றவர்களாக வாழ்வார்கள். காணி உரிமை நிச்சயம் வழங்கப்படும்." – என்றார்.

# தம்புள்ள விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பேபுஸ்ஸ – திருகோணமலை பிரதான வீதியில் தம்புள்ளையிலிருந்து ஹபரணை நோக்கிப் பயணித்த லொறியுடன் எதிர்த் திசையில் வந்த ஓட்டோ ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் தம்புள்ளை கிரலகொல்ல பிரதேசத்தில் வசிக்கும் 73 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் ஓட்டோவின் சாரதி மற்றும் பின் இருக்கையில் பயணித்த இருவர் காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நபர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



உயிரிழந்தவரின் சடலம் தம்புள்ளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளமையுடன், லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானை தாக்கி ஒருவர் மரணம்



கெபித்திகொல்லேவ பகுதியில் சைக்கிளில் பயணித்த ஒருவர் மீது காட்டு யானை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சாதகமான அம்சம்

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்ற ஜனாதிபதி தேர்தல் இன்னும் 12 நாள்களில் வருகின்றது.

போட்டி பெரும்பாலும் மூன்று முனை தான். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க - மூவர்தான் களத்தில் முன்னணியில் உள்ளனர்.

இந்த மூவரும் அளிக்கப்படும் வாக்குகளில் மொத்தம் 85 முதல் 90 வீதமான வாக்குகளை சுவீகரிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வழமைக்கு முற்றிலும் மாறாக இம்முறை பிரதான வேட்பாளர்கள் மூவருமே பேரினவாதத்தை - இன மேலாதிக்கத்தை - தங்கள் பிரசாரத்தில் முன்னெடுக்கவில்லை. இன சமரசம் பேணும் போக்கைத்தான் கையாளுகிறார்கள்.

தங்களின் வெற்றிக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகளும் அவசியமென்பதால் இன சமரசம் பேணுவதில் - பேசுவதில் - அவர்கள் தீவிரம் காட்டுகின்றனர்.

தமிழ் கட்சிகளும் - குறிப்பாக தமிழர்களின் பிரதான கட்சியான தமிழரசும் - மூன்று வேட்பாளர்களையும் இறுதி கட்டம் வரை சமதூரத்தில் வைத்து, அத்தரப்புகளுடன் இணங்கிப் போகும் சாத்தியங்களை கோடி காட்டி வந்தமையால் மூன்று தரப்புகளுமே இனவாதப் போக்கை வரித்துக் கொள்ளவில்லை.

மாறாக, தமிழ்க் கட்சிகளை அரவணைப்பதற்காக தமது கொள்கை நிலைப்பாட்டு வாயில்களை அகலத் திறந்து வைத்துப் பார்த்திருந்தன. அதே போக்கைத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் மூன்று பிரதான வேட்பாளர்களும் பிரதிபலித்து நின்றனர்.

பிரதான வேட்பாளர்கள் மூவரினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ள ஒரு முக்கிய அம்சத்தை தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் ஒரு பேட்டியில் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

வழமையாக நாட்டின் ஒற்றை ஆட்சி முறைமையில் பிடித்துத் தொங்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் இம்முறை அதைச் செய்யவில்லை. மூன்று பிரதான வேட்பாளர்களும் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒற்றை ஆட்சியை உறுதிப்படுத்தி நிலைநிறுத்துவோம் என்று வலியுறுத்தவில்லை.

மாறாக சமஷ்டிக்கான வாய்ப்பை மூவருமே திறந்து விட்டுள்ளனர்.

பகிரப்பட்ட அதிகாரம் மீளப் பெறப்பட மாட்டாது என்று சஜித் பிரேமதாஸ குறிப்பிடுவது ஒரு வகையில் சமஷ்டிக்கான அடிப்படைக் கோட்பாடுதான்.

நல்லாட்சி அரசில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு உருவாக்க முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்து நிறைவேற்றுவோம் என்கிறது அநுர குமாரவின் தேர்தல் விஞ்ஞாபனம். அந்த அரசமைப்பு நகலில் பகிரப்பட்ட அதிகாரம் மீளப் பறிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முழுமையாக உள்ளன.

அதேசமயம் 13 மூலம் பகிரப்பட்ட அதிகாரங்கள் மீளப் பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளன, அவை மீளவும் பகிரப்படும், திருப்பி பறித்தெடுக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவதும் கூட சமஷ்டிக்கான ஆரம்ப நிலைதான்.

ஆக, இந்தத் தேர்தலில் 85 முதல் 90 வீத வாக்குகளை பெறக்கூடிய மூன்று பிரதான வேட்பாளர்களும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஒற்றையாட்சியை வலியுறுத்தி நிற்கிறோம் என்று பிடிவாதம் பிடிக்கவில்லை. சமஷ்டிக்கான சாத்தியங்களை - வாசல்களை - நிரந்தரமாக மூடிவிடாதமையும் நல்ல அம்சங்களாக நோக்கப்பட வேண்டும்.

இந்தத் தேர்தலின் பின்னர் தீர்வுக்கான முயற்சிகள் ஆரோக்கியமாக முன்னேற இந்த நிலைப்பாடுகள் உதவக்கூடும்.

# இந்தியாவில் முதல் குரங்கு அம்மை பாதிப்பு: மாதிரிகள் சோதனைக்கு அனுப்பி வைப்பு

குரங்கு அம்மை நோய் பாதிப்பு உள்ள நாட்டிலிருந்து சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த ஒருவருக்கு அந்த நோய்க்கான அறிகுறி இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக மத்திய சுகாதாரத்துறை நேற்று தெரிவித்துள்ளது.

நோயாளி அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவரின் உடல்நிலை சீராக இருக்கிறது. கவலை அடையத் தேவை இல்லை என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த நபரிடமிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அவருக்கு குரங்கு அம்மை நோய் உள்ளதா என்பதை உறுதி செய்ய சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதுகுறித்து சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“ஏற்கனவே நிறுவிக்கப்பட்ட நெறிமுறைகளின் படி, இந்த விவகாரம் கண்காணிக்கப்படுகிறது. நோய் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், நாட்டில் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்கவும் அந்த நபருடன் தொடர்புடைய நபர்களைக் கண்டறியும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய நோய்க்கட்டுப்பாட்டு மையம் (என்.சி.டி.சி) முன்




னதாக மேற்கொண்ட இடர் மதிப்பீட்டோடு இந்த புதிய வழக்கின் வளர்ச்சிகள் ஒத்துப்போகின்றன. என்றாலும் அச்சப்பட தேவை இல்லை.

இதுபோன்ற தனிமைப்படுத்தப்பட்ட பயணிகள் தொடர்பான நோய் வழக்குகளை கையாள, நாடு முழு அளவில் தயாராக உள்ளது. சாத்தியமான ஆபத்துகளை எதிர்கொள்ளவும் அவற்றைத் தணிக்கவும் நடவடிக்கைகள் தயாராக உள்ளன.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் தமிழகத்தில் 2 நாள்களுக்கு மழைக்கு வாய்ப்பு



வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது இன்று மேற்கு வங்கம், ஒடிசா இடையே கரையை கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

“மத்திய வங்கக்கடல் பகுதியில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, மத்தியமேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெற்றுள்ளது. இது ஆந்திர மாநிலம் கலிங்கபட்டினத்துக்கு கிழக்கே 280 கி.மீ தொலைவிலும், ஒடிசா மாநிலம் கோபால்பூருக்கு தென்கிழக்கே 230 கி.மீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, இன்று ஒடிசா மாநிலம் பூரி, மேற்கு வங்க மாநிலம் திகா கடற்கரை இடையே கடக்கக் கூடும்.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்றும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வலுவான தரைக்காற்று 30 முதல் 40 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். 10 முதல் 14 ஆம் திகதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.”- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரஷ்யா செல்கிறார் அஜீத் தோவல் உக்ரைன் அமைதிப்பேச்சுக்கு வாய்ப்பு

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல், இந்த வாரம் ரஷ்யா செல்லவுள்ள நிலையில் இந்தியாவின் உதவியுடன் ரஷ்யா – உக்ரைன் அமைதிப்பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவுடன் மிகவும் நெருங்கிய நட்பு நாடாக உள்ள இந்தியா, உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர மத்தியஸ்தம் செய்யலாம் என ரஷ்யா ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளதோடு, இதே கருத்தை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் கூறியுள்ளார்.

இரு நாட்டு ஜனாதிபதிகளுடனும் இந்தியாவுக்கும், பிரதமர் மோடிக்கும் நல்லுறவு உள்ள நிலையில், போரை முடிவுக்கு கொண்டு வர இந்தியாவின் முன்முயற்சியை உலகமே எதிர்பார்க்கிறது.

இந்த நிலையில், அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் விதமாக, இந்திய பாதுகாப்பு ஆலோசகர்



அஜீத் தோவல், இந்த வாரத்தில் ரஷ்யா செல்லவுள்ளார்.

பிரிக்ஸ் மாநாட்டுக்காக செல்லும் அவர், ரஷ்யா மற்றும் சீனா நாடுகளின் உயர் அதிகாரிகள், அமைச்சர்களுடன் பேச்சு நடத்துகிறார். இதன் மூலம் ரஷ்யா – உக்ரைன் போரில் திருப்பம் ஏற்பட வாய்ப்பு உருவாகியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

# காசாவில் இஸ்ரேல் தாக்குதல் 30 இற்கும் மேற்பட்டோர் பலி!





காசாவின் பல்வேறு பகுதிகளில் கடந்த 24 மணிநேரத்தில் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 30 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதன்படி இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த பாடசாலை ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேற்படி தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஆக்கிரமிப்புக்குள்ளான மேற்குக் கரையுடன் ஜோர்டானின் எல்லைப்பகுதிக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

இதனிடையே காஸாவில் எஞ்சியுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்குப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹு தலைமையிலான அரசாங்கம் ஒப்பந்தமொன்றினை கைச்சாத்திட வேண்டும் எனக்கோரி இஸ்ரேலில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 750,000 இஸ்ரேலியர்கள் வீதிகளில் இறங்கி இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்தும்



காசாவில் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே காசா மீதான இஸ்ரேலின் போர் காரணமாக 40,939 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 94,616 பேர் காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி முதல் ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 239 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

# அமெரிக்காவில் நெடுஞ்சாலையில் பயணித்த வாகனங்கள் மீது துப்பாக்கிச் சூடு; 7 பேர் காயம்









அமெரிக்காவின் கென்டக்கி மாநிலத்தில் நெடுஞ்சாலையில் பயணித்த வாகனங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபர் தொடர்பில் அந்நாட்டுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# இஸ்ரேலில் வெடித்தது பாரிய போராட்டம்



காஸாவில் எஞ்சியுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹு தலைமையிலான அரசாங்கம் ஒப்பந்தமொன்றினை கைச்சாத்திட வேண்டும் என இஸ்ரேலில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் இஸ்ரேலியர்கள் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தெற்கு காசாவில் உள்ள சுரங்கப்பாதை ஒன்றிலிருந்து ஆறு பணயக் கைதிகளின் உடல்கள் அண்மையில் மீட்கப்பட்டதையடுத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.





# துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்காக ஐவர் மாத்திரமே வீடுகளுக்குச் செல்ல முடியும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்பாளர்களின் தேர்தல் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்காக அதிகபட்சம் 05 பேர் மாத்திரமே வீடுகளுக்குச் செல்ல முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எல்.ஏ.எம். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.

எதிர்வரும் 11,12,13, மற்றும் 14 ஆம் திகதிகளிலும் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்ற போதிலும், விசேட தினமாக அறிவித்து வாக்காளர் அட்டை விநியோகிக்கப்பட்டது.

இதன்படி, நேற்று காலை 8 மணி முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த பணிகள் மாலை 6 மணிவரையில் முன்னெடுக்கப்பட்டன.

எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பின்னர் வீடுகளுக்குச் சென்று வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தினங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத வாக்காளர்கள் எதிர்வரும் 18,19 மற்றும் 20 ஆம் திகதிகளில் தங்களது பகுதிகளுக்குப் பொறுப்பான அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று தங்களது அடையாள அட்டையைக் காண்பித்து வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார்.



# சீமெந்துக்கான வரி குறைப்பு

இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கு விதிக்கப்பட்ட செஸ் வரி கிலோ ஒன்றுக்கு 1 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி குறைப்பு கடந்த 06 ஆம் திகதி முதல் அமுலாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# வாக்காளர் அட்டைகளை விநியோகித்த உத்தியோகத்தரைத் தாக்கியவர் கைது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகித்த களுத்துறை தெற்கு அஞ்சல் நிலையத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் களுத்துறை வடக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர், களுத்துறை – ஜாவத்த பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனப் பொலிஸ் தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான அஞ்சல் உத்தியோகத்தருக்கும் சந்தேகநபருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர், மோதலாக மாறியுள்ளது.

அஞ்சல் உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# குருநாகல் – நீர்கொழும்பு வீதியில் வாகன விபத்து நான்கு பேர் காயம்




குருநாகல் – நீர்கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

ஓட்டோவும் தனியார் பஸ் ஒன்றும் மோதியதிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓட்டோவில் பயணித்தவர்களே விபத்தில் காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தல் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,863 ஆக அதிகரிப்பு

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,863 ஆக அதிகரித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 209 முறைப்பாடுகள் நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளன.




இதேவேளை, இதுவரையில் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 2,113 முறைப்பாடுள் தொடர்பில் தீர்வு கண்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எஞ்சிய 750 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# வெளிநாட்டு விடுமுறை முடிந்து பணிக்குத் திரும்பாத அரச ஊழியர்கள் சேவையிலிருந்து விலகியவர்களாவர்

## பொதுநிர்வாக அமைச்சு அறிவிப்பு




வெளிநாட்டு விடுமுறை நிறைவடைந்த பின்னரும் உரிய தினத்தில் கடமைக்குச் சமுகமளிக்காத அரச ஊழியர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்றவர்களாகக் கருதப்படுவார்கள் எனப் பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுநிர்வாக அமைச்சுச் செயலாளரின் கையொப்பத்துடன் சுற்றுருபம் வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு விடுமுறை காலத்தை நீடிக்க வேண்டுமாயின் முதலாவது விடுமுறை காலம் நிறைவடைவதற்கு முன்னர் அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டுமென அரச நிறுவன பிரதானிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை காலத்தை நீடித்துக் கொள்ளும் அனுமதியை பெறுவதில் ஏற்படும் சிக்கல் ஏற்கனவே பெறப்பட்ட விடுமுறை காலப்பகுதிக்குள் தீர்க்கப்படாவிட்டால் உரிய தினத்தில் கடமைக்கு சமுகமளிக்க வேண்டியது கட்டாயமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் வெளிநாட்டு விடுமுறை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தை மீறும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.



# மத்திய வங்கக் கடலில் நிலைகொண்ட தாழமுக்கம் சூறாவளியாக மாறுகிறது

மத்திய வங்காள விரிகுடா பகுதியில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம், சூறாவளியாக மாறி, எதிர்வரும் இரு தினங்களில் வடமேற்கு திசையில் நகர்ந்து வடக்கு ஒடிசா கடற்கரையை அடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன்காரணமாக வங்காள விரிகுடா கடல் பகுதிகளில் 70 முதல் 80 கிலோமீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசுவதுடன், மழைபெய்யக்கூடிய சாத்தியமும் நிலவுகிறது.

எனவே, மேற்படி கடற்பகுதியில் மறு அறிவித்தல் வரை மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.



# சிலிண்டருடன் மோட்டார் சைக்கிள் பேரணி செல்லத் தயாராக இருந்த ஆறு பேர் கைது!

## புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் சம்பவம்

**(ந.லோகதயாளன்)**

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்து மோட்டார் சைக்கிளில் அவரது தேர்தல் சின்னமான காஸ் சிலிண்டரை கட்டிக் கொண்டு நேற்று புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பேரணியாக செல்லத் தயாராக இருந்தவர்களில் 6 பேர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சிலிண்டரை கட்டியவாறு அதனைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் பேரணியாக செல்வதற்கு இவர்கள் தயாராக இருந்துள்ளனர்.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் அலுவலக அதிகாரிகள் மற்றும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மோட்டார் சைக்கிள்களைச் சோதனையிட்ட போது தேர்தல் பதாதைகள் காணப்பட்டுள்ளன.

அதனையடுத்து அந்த்ச் இளைஞர்களிடமிருந்து துண்டுபிரசுரங்கள் மற்றும் சிலிண்டர், மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸார் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.














# முல்லை புளியமுனைக் கிராமத்தில் கிணற்றில் வீழ்ந்த யானைக்குட்டி!



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட புளிய முனைக் கிராமத்தில் உள்ள கிணற்றில் வீழ்த யானைக்குட்டியை மீட்கும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரு கிறது.

புளிய முனை கிராமத்தில் உள்ள கிணறு ஒன்றில் காட்டுயானைக்குட்டி ஒன்று விழுந்திருந்ததை கண்ட மக்கள் கிராம அலுவலருக்கு தகவல் வழங்கி யிருந்தனர்.

இந்நிலையில் யானைக்குட்டியினை மீட்கும் பணியில் கிராம அலுவலர், கிராம மக்கள் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஆணைக்குழுவின் கோரிக்கையை ஆராய்ந்து பாடசாலைகளின் விடுமுறை குறித்து முடிவு

## கல்வி அமைச்சு தகவல்

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பாடசாலை விடுமுறை வழங்குவது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மா னம் எடுக்கப்படவில்லையென கல்வி யமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையை ஆராய்ந்து பாடசாலை விடுமுறை தொடர்பான திட்டமிடல்கள் முன்னெடுக்கப்படுமென அமைச்சு கூறியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தேசிய தேர்தல் ஆணைக்குழு குறிப்பிடு கையில் –

வாக்கெண்ணும் நிலையங்களை தயார்படுத்தும் நடவடிக்கைகள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை நிறை வடைந்த பின்னர் ஆரம்பிக்கப்படுமென தெரிவித்தது.

வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படவுள்ள பாடசாலை களை எதிர்வரும் 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் தயார்படுத்தத் தற் போது திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தேசிய தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள் ளது.




இது தொடர்பில் கல்வியமைச்சுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 09.09.2024




இன்று சிறப்பான வாய்ப்பு காணப்படும். உங்கள் தனித்திறமையை பயன்படுத்தி உங்கள் இலக்குகளை முடிப்பீர்கள். மனதில் இருக்கும் தெளிவு காரணாக சரியான முடிவை எடுப்பீர்கள்.

அதிக பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் தனித்த திறமை மூலம் உங்கள் பணிகளில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நீங்கள் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நல்ல பிணைப்பை உருவாக்குவீர்கள்.

உங்கள் திறமை மற்றும் நேர்மையான முயற்சி மூலம் உங்களுக்கு கூடுதல் ஊக்கத்தொகை கிடைக்கும். இன்றைய நாளுக்குத் தேவையான போதிய பணம் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சீரான பலன்கள் கிடைக்கும். விருந்தினர்களின் வருகை உங்களுக்கு உற்சாகமளிக்கும். அதிர்ஷ்டம் காரணமாக நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக பணியிடத்தில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். இன்று உங்கள் பதட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

இன்று முக்கிய பணிகளை உங்களால் முடிக்க இயலாது. உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது சில அசாதாரணமான தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலயை அளிக்கும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்தியான மனநிலை காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான வார்த்தைகள் மூலம் அவரை மகிழ வைப்பது கடினமாக உணர்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. அதிகமாக சம்பாதித்தாலும் இன்று தேவையற்ற விஷயங்களுக்காக செலவு செய்ய நேரலாம்.




இன்று சவாலான சூழ்நிலை காணப்படும். இதனால் சமநிலை இழப்பீர்கள். நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இதனை சமாளிக்க வேண்டும். பாதகமான விளைவுகள் ஏற்படமால் இருக்க கவனமாக உரையாடாவும்.

நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு ஒழுங்காக பணியாற்ற வேண்டும். உங்களின் முயற்சி சிறப்பாக இருந்தாலும் உங்கள் முதலாளிகளின் அங்கீகாரம் பெற இயலாது.

உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் மகிழ்ச்சியான போக்கை மேற்கொள்ளவேண்டும். அமைதியான போக்கு சூழ்நிலையின் தாக்கத்தை தணிக்கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் சம்பாத்தியமும் குறைவாக இருப்பதன் காரணத்தால் பணத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.




இன்று உங்கள் ஆர்வம் மேம்படும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பயணங்கள் ஏற்படலாம்.

பணியிடத்தில் ஆச்சரியமும் உற்சாகமும் காணப்படும். உங்கள் கடின உழைப்புக்கான ஊக்கத்தொகை கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். அனுசரித்து போவதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்களுக்கு உயர்வு நிலை கிடைக்கும். இதனால் நீங்கள் அதிகம் சம்பாதிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். நிகழ்வுகள் சீராக நடக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள். அவற்றின் மூலம் நன்மை விளையும்.

பணியிடத்தில் சிறந்த வளர்ச்சி காணப்படும். இன்று முழுவதும் மும்மரமாக இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் இன்று சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான தருணங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

கணிசமான பண வரவு காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் நீங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. வேதனையான சூழ்நிலையில் நீங்கள் பொறுமை இழந்து உணர்ச்சி வசப்படலாம். எதையும் லேசாக எடுத்துக்கொள்வதன் மூலம் நன்மை காணலாம். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு ஆறுதல் தரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. சில தவறுகள் காரணமாக வேலையில் முன்னேற்றம் காண்பது கடினம்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அவருடன் பேசும் போது நீங்கள் மென்மையான இனிமையான வார்த்தைகளை பேச வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

நடக்கும்போது கீழே விழ வாய்ப்புள்ளது.




இன்று சில கடினமான சவாலான சூழ்நிலையை கையாள வேண்டியிருக்கும். இறைவழிபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் குழப்பமான சூழ்நிலை காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் உங்கள் துணையிடம் தீவிரமாக நடந்து கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்த்து நீங்கள் நட்போடு நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது.இதனால் கடன் வாங்க வேண்டிய சூழல் ஏற்படும்.

இன்று காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. என்றாலும், தக்க சமயத்தில் சிகிச்சை பெறுவதன் மூலம் குணம் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.09.2024




இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். உங்கள் இலக்குகள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். உங்கள் செயல்களின் மூலம் வெற்றி கிடைக்கு.

உங்கள் பணியில் நீங்கள் மிகுந்த திருப்தி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே அன்பு வளரும்.

பண வரவு உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும். அதிர்ஷ்டம் காரணமாக இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காமல் போகலாம். நீங்கள் உங்கள் சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். இந்தச் சவால்களை மேற்கொள்ள நீங்கள் திட்டமிட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது சிறந்ததல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். இதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பணத்தை பயன்படுத்த இயலாது.




இன்று விரும்பும் பலன்களை அடைய கடினமாக உழைக்க வேண்டும். இன்று அனுகூலமான நாளாக இருக்காது. நீங்கள் நம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும்.

பணியிடத்து சவாலான சூழ்நிலையை நீங்கள் பொறுமையோடு சமாளிக்க வேண்டும். பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களை பாதிக்கும். இதனால் உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி காணப்படாது.

உங்கள் வீட்டு பெரியவர்களின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழக்கும் வகையில் சில சவால்கள் காணப்படும். நன்மையான பலன்கள் காண அனுசரித்து நடக்க வேண்டும். தைரியமாக இருந்தால் சிறப்பாக உணரலாம்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திறமையாக பணியாற்ற கவனித்து ஒழுங்கு முறையுடன் பணியாற்ற முயல வேண்டும்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தும் வாய்ப்புளதால் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். நல்லுறவு வளர மென்மையாக நட்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் குடும்பத்துக்காக நீங்கள் தேவையின்றி பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.


Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327
077 336 6443 | 071 777 2377
021 567 5566 | 021 222 9581
021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park